27th January 1970]

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் இருக்கிற பெண் தலைமையாசிரியை பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குச் செல்ல வேண்டுமென்று விருப்பம் தெரிவித்தால், அதை நிறைவேற்ற வழிவகை செய்ய அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அப்படிக் கொண்டு வரும்போது, பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் பணி புரிகிற பெண் ஆசிரியைகள்தான் தடுக்கக்கூடும். தங்களுக்குள்ள வாய்ப்பை அங்கிருந்து வந்தவர் கெடுக்கிறார்கள் என்று சொல்வார்கள். ஆகையால் இதில் உள்ள சங்கடங்கள் ஆராயப்படவேண்டியிருக்கிறது.

Teacher-pupil ratio

a* 32. Q.—THIRU V. THANGAPANDIAN AND THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(a) whether the Government are aware of the fact that it is not possible to impart education of a good standard, since the teacher-pupil ratio in most of the educational institutions in Tamil Nadu is very high ; and

(b) if so, the action taken thereon ?

ஆசிரியர்–மாணவர் வீதாசாரம்

திரு. வி. தங்க பாண்டியன் and திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு கல்வி–சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) தமிழ் நாட்டின் அநேக கல்வி நிலையங்களில் ஆசிரியர்–மாணவர் வீதாசாரம் மிக அதிகமாயிருப்பதால் தரமான கல்வி போதிக்க முடியவில்லை என்பது அரசுக்குத் தெரியவருமா ?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) தற்பொழுது நடைமுறையில் இருந்து வரும் ஆசிரியர்–மாணவர் விகிதத்தின் காரணமாகக் கல்வித் தரம் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கல்வி நிலையங்களிலிருந்தோ, பள்ளிக் கல்வித் துறை ஆய்வு அலுவலர்களிடமிருந்தோ பள்ளிக் கல்வித் துறை இயக்குநருக்கு முறையீடுகள் எவையும் வரவில்லை.

(இ) எழாது.

திரு எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, திருச்சியில் நடந்த ஒரு மகாநாட்டில் இந்த ஆசிரியர்கள் மாணவர்கள் விகிதத்தைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவ்வளவாகக் குறைக்க இயலாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட சொன்னார்கள். 1:55 என்ற விகிதத்தையாவது இனிமேல் வரக்கூடிய ஆசிரியர்களுக்கு அமுலாக்க வேண்டுமென்றும் அதனால் இப்போதிருக்கிற ஆசிரியர்கள் யாரையும் வெளியே அனுப்பக் கூடாது என்றும் அரசாங்கம் உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, விகிதாச்சார முறை நாம் கணக்கெடுக்கிறபடி இல்லாமல், ஓரளவு மாணவர்கள் விகிதம் அதிகமாகும் சூழ்நிலை ஏற்படுகிறது. ஒரு ஆண்டுக்கு இவ்வளவு ஆசிரியர்கள் வேண்டுமென்று கேட்டால், ஒதுக்கப்படுகிற நிதி நிலையை ஒட்டி, ஓரளவு ஆசிரியர்கள் ஒதுக்கப்படுகிறார்கள். அவர்களை எல்லா மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கும் நிலையில் தான் விகிதாசாராம் அமைகிறது. இருக்கிற ஆசிரியர்களை வெளியே அனுப்பாமல், ஏற்றுக் கொள்ளும் வழிவகைகளை அரசு காணும்.

a.—Postponed from the list of questions for 23rd January 1970.

[27th January 1970

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்கு மாணவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்ற காரணத்தால், கல்வியின் தரம் குறைந்து விட்டதா என்பதைப் பற்றி ஆசிரியர்களிடமிருந்தோ, டி.பி.ஐயிடமிருந்தோ முறையீடுகள் எதும் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உயர்நிலைப் பள்ளியில் பணி புரியும் ஆசிரியர்கள் இதன் காரணமாக கல்வியின் தரம் குறைகிறது என்று சொல்வதற்கு தைரியம் வருமா ? அதனால் அவர்கள் மேல் குறை காணப்படும் என்ற தர்ம சங்கடத்தில் ஒன்றுமே அரசாங்கத்திற்குத் தெரிவிக்காமல் இருந்து விடுகிறார்கள். அதனால் அரசாங்கம் அதை கவனிக்க வேண்டும். முன்னாள் அமைச்சர் அவர்கள் கூறும்போது நிதி நிலையை அனுசரித்து இந்தக் குறையை நிவர்த்திக்க முடியாத சங்கடங்கள் இருக்கின்றன என்று தெரிவித்தார்கள். கல்வித் துறைக்குக் கிடைக்கும் நிதியைக் கல்வியின் தரம் வளரவும் ஆசிரியர்களின் தரத்தை உயர்த்த அவர்களுக்கு மறு பயிற்சி அளிக்கவும் முதல் இடம் தந்து அதற்குச் செலவிடவேண்டுமென்ற கொள்கையை அரசாங்கம் மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட முறையீடுகள் எதுவும் வரவில்லை. ஆங்காங்கு தீர்மானம் போடுகிறார்கள். பேசுகிறார்கள். கருதுகிறார்கள். முறையீடு வர வேண்டிய அவசியம் இல்லை. அதை நாமே தெளிவாக உணர்கிறோம். மாணவர்கள் எண்ணிக்கை வளர வளர, ஆசிரியர்கள் பற்றாக் குறையாக ஆவதால் கற்பிப்பதிலும் கட்டுப்படுத்துவதிலும் அக்கறை குறைகிறது. வாய்ப்பு குறைகிறது. மாணவர்கள் விகிதத்தைக் குறைக்கவேண்டுமென்ற எண்ணம் இருந்தாலும், நிதி நிலையைப் பார்க்கும்போது, அச்சமாக இருக்கிறது. 4,000 ஆசிரியர்களுக்கு கோரிக்கை வைத்தால் நிதி நிலையை ஒட்டி 2,500 ஆசிரியர்களைத் தான் இந்த ஆண்டு வைத்துக்கொள்ள முடியும். நம் நாட்டைப் பொறுத்த வரையில் வரவு செலவுத் திட்டமானது தேவையைப் பொறுத்து அமைவதில்லை. இருக்கின்ற நிதி நிலையை எப்படிப் பயன்படுத்துவது என்பதாகத் தான் இருக்கிறது. மத்தியிலும் மாநிலத்திலும் இந்தப் பொருளாதார நிலை இருக்கிறது. கட்டிட வகையில் தான் குறைக்கலாம். அதனுடைய தேவை மற்றொரு பக்கத்தில் வளருகிறது. பொதுவாக எல்லாவற்றையும் அனுசரித்து இந்த நிலைமையை சீர்திருத்தி இதில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று அரசு கருதுகிறது. நிதித் துறையிலும் முதலமைச்சரிடமும் இது பற்றி விவாதித்ததில் அதிகமான ஆசிரியர்களை வெளியே அனுப்பாமல் இருப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது.

திரு டி. கே. சுப்பையா : குறைந்த பட்சம் மூன்றாவது வகுப்பு வரையில் படிக்கிற இளம் மாணவர்களுக்கு 25 பேர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதாச்சாரத்தில் வைத்தால் தான் நல்லது. அதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? ஐந்து வயதிற்கு மேற்பட்டு எட்டு வயது வரையில் உள்ள பிள்ளைகளை சரியாகக் கவனிக்காவிட்டால், அவர்களுக்குக் கல்வி வருவதில்லை. ஆசிரியர்கள் நேரடியாகக் கவனிக்க முடியாது. குறைந்த பட்சம் 25 : 1 என்ற வகையில் மூன்றாவது வகுப்பு வரையில் ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்: இப்போது கிட்டதட்ட 1 முதல் 29 மாணவர்கள் வரும் வரையில் ஒரு ஆசிரியர் என்றும், 30 லிருந்து 55 வரையில் இரண்டு என்றும், 56-லிருந்து 75 வரையில் 3 என்றும், 76-லிருந்து 95 வரையில் நான்கு என்றும், 96 முதல் 115 வரையில் 5 என்றும் உள்ள அளவுக்குக் கொடுத்து வருகிறார்கள். ஆனர்ஸ், பி,ஏ. போன்ற வகுப்புகளுக்கு சொன்னாலும் கூட அதிகமாக முடியாது. 3-வது வகுப்பில் தான் அதிக எண்ணிக்கை ஆசிரியர்கள் வரும். அதிகமான ஆசிரியர்களை நியமிக்கும் கட்டமே அதுதான். ஆனால் நிதிநிலை தான் நம்மைத் தாக்குகிறது.

திரு கே. எஸ். அப்துல் வகாப் : நமது மாநிலத்திற்கு அண்டை மாநிலங்களில் உள்ள ஆசிரியர்–மாணவர் விகிதாச்சாரம் எந்த விதத்தில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

27th January 1970]

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : மற்றைய மாநில விகிதாச்சாரம் எப்படி இருக்கிறது என்பது தெரியவில்லை. ஒன்று மட்டும் கூறுவேன். மற்ற மாநிலங்களை விட நம் மாநிலத்தில் செம்மையாக வைத்திருக்கிறோம். பயிற்சி பெற்ற ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், செம்மையாக இருக்கிறது. 6 முதல் 11 வயது வரை கட்டாயக் கல்வி என்ற கொள்கையை நாட்டின் விடுதலைக்குப் பிறகு ஏற்றதும் படிப்படியாக முயற்சித்து இப்போது 94 சதம் மாணவர்களைக் கற்பிக்கிறோம். வேறு மாநிலங்களில் அவ்வளவு இல்லை. நம் விகிதாசார முறை, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் முறை ஆகியவற்றை மற்றவர்கள் பாராட்டுகிற அளவுக்கு நடத்துகிறோம். எப்படி நடத்துகிறீர்கள் என்று மற்றவர்கள் கேட்பதிலிருந்து பூரிப்பு அடையலாம், இதையொட்டி தற்போது திருப்தியடைய வேண்டுமென்று சொல்லவில்லை. மேற்கொண்டும் முயற்சி எடுப்போம்.

Medical College, Madurai

a*33. *Q.*—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :—

(*a*) whether it is a fact that the Madurai Medical College hostel students suffered without water for bathing during July and August 1968 ;

(*b*) whether it is a fact that a letter has appeared in the 'Letters to the Editor' column of the 'Hindu' in this regard ;

(*c*) if so, whether the attention of the Government was drawn to that letter ; and

(*d*) if so, the action taken thereon ?-

மதுரை மருத்துவக் கல்லூரி

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மருத்துவக் கல்லூரி விடுதியில் 1968 ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் மாணவர்கள் குளிக்கத் தண்ணீர் இல்லாமல் அவதியுற்றனர் என்பது உண்மையா?

(இ) இது பற்றி "ஹிந்து" ஆங்கிலம் நாளிதழில் "ஆசியரியருக்குக் கடிதம்" என்ற தலைப்பில் குறையைத் தெரிவிக்கும் கடிதம் வந்தது சரியா?

(உ) ஆமெனில், இதனை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா?

(எ) அதன் மேல், எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) தகவல் இல்லை.

(உ) அண்டு (எ) இக்கேள்விக்கு இடமில்லை.

Chingleput Medical College, Hospital

a* 34. *Q.*—THIRU G. VASANTHA PAI : Will the Hon. the Minister for Education and Health be pleased to state the reasons for the dearth of patients in the Chingleput Medical College Hospital ?

---

a.—Postponed from the list of questions for 23rd January 1970.